கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.332/2008**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.11.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 12.11.2024 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | நாராயண ஞானதேசிக சுவாமிகள் | வயது.. | 65 |
| தந்தை பெயர்.. | நாராயணன் | கிராமம்.. | கோவிலூர் மடம், சிவகங்கை மாவட்டம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

**15.** பொன்னம்பலசுவாமி மடத்தை சுற்றி நான்கு புறமும் compound சுவர் உள்ளது என்றால் சரிதான். பொன்னம்பலசுவாமி மடத்திற்கு மேனேஜர் உள்ளாரா என்றால் உள்ளார் அவர் ராமநாதன். ராமநாதன் எவ்வளவு ஆண்டுகளாக மேனேஜராக இருக்கிறார் என்றால் 25 வருடங்களாக. கதிரேசன் செட்டியார் எவ்வளவு ஆண்டுகளாக பொன்னம்பலசுவாமி மடத்தில் பணியில் இருந்தார் என்றால் தெரியாது. இந்த வழக்கு நடக்கும் காலத்திலும், அதற்கு முன்பு ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலும் கதிரேசன் செட்டியார் தான் மடத்தில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. கதிரேசன் செட்டியாரை இந்த வழக்கில் வா.சா.4 ஆக சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொன்னம்பலசுவாமி மடத்தில் ரசீது கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் வாடகை பெற்றதற்கு மட்டும் கொடுப்போம் அதை தவிர வேறு எந்த பணமும் பெற்றது இல்லை, ரசீதும் கொடுத்தது இல்லை. வாடகைக்கென தனியாக அச்சடிக்கப்பட்ட ரசீது மடத்தில் இருக்குமா என்றால் இருக்கும்.

16. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ஆவணத்தை இதற்கு முன்பாக பார்த்துள்ளேனா என்றால் இந்த வழக்கிற்காக நகல் மட்டும் பார்த்துள்ளேன். வா.சா.ஆ. 1 ஆவணம் உண்மையான ஆவணமா அல்லது தயாரிக்கப்பட்ட ஆவணமா என்றால் எனக்கு தெரியாது. காசிவிஸ்வநாததேசிக சுவாமிகள் கையெழுத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கதிரேசன் செட்டியார் கையெழுத்து உள்ளதால் அவரை அழைத்து விசாரணை செய்தேனா என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முத்திரை தாள் காசிவிஸ்வநாததேசிக சுவாமிகள் பெயரில் தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய தேதி எனக்கு தெரியாது என்றாலும், அந்த தேதியில் பணம் கொடுக்கல் வாங்கல் போன்ற விவரங்கள்

எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் உண்மையான ஆவணமா அல்லது தயார் செய்யப்பட்ட ஆவணமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, 2 ஆவணம் சம்மந்தமாக எதிர் வழக்குரையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் பொய்யான ஆவணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

17. வா.சா.ஆ.1 ,2 ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் பொன்னம்பலசுவாமி மடத்தின் letter pad என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் கதிரேசன் செட்டியார் எழுதியாதா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 கடிதம் வழக்கறிஞர் சடகோப்பன் வாதிக்கு கொடுத்ததா என்றால் அந்த வழக்கறிஞர் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 5 ஆவணமானது கோவிலூர் மடம் ஆண்டவர் மன்றத்துடைய letter pad என்றால் சரிதான். கருப்பையா என்பவர் பொன்னம்பலசுவாமி மடத்திலும் கோவிலூர் மடத்திலும் வேலை செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. கருப்பைய்யா எங்கள் மடத்தில் வேலை செய்தாரா என்று விசாரணை செய்தேனா என்றால் தற்போது பணியில் இருக்கும் அனைவரும் சமீபத்தில் மடத்தில் சேர்ந்தவர்கள் என்பதால் நான் யாரையும் விசாரிக்கவில்லை.

18. எங்களுடைய மடத்தில் பணி செய்பவர்கள் எப்போது பணியில் சேர்ந்தார்கள், எப்போது பணியில் இருந்து வெளியே சென்றார்கள் போன்றவை குறிப்பிட்டு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ. 8 ஆவணமும் பொன்னம்பலசுவாமி மடத்தின் letter pad என்றால் சரிதான். வா.சா.ஆ.12 கிரய பத்திரம் தவிர வழக்கு சொத்திற்கு வேறு எந்த பத்திரமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பாக வேறு ஒரு வழக்கான OS.28/1990 என்ற வழக்கு மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் நடந்ததா என்றால் தெரியாது. அந்த வழக்கின் முடிவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அதன் பிறகு AS.234/1992. SA.365/1995 சிங்கார முதலியார் தாக்கல் செய்த மேல்முறையீடு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன வழக்குகளுக்காக யார் செலவு செய்தது போன்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பொன்னம்பலசுவாமி மடத்தின் கணக்குகளை குறிப்பீடு செய்யும் போது நீதிமன்ற செலவுகள் பற்றிய குறிப்பும் இருக்குமா என்றால் இருக்கும்.

19. அந்த கணக்கு வழக்குகளை நான் பார்த்தேனா என்றால் நான் 1997 -யில் இருந்து தான் கணக்குகளை பார்த்து வருகிறேன், ஆகையால் மேற்சொன்ன வழக்குகள் பற்றிய கணக்குகளை நான் பார்த்ததில்லை. வா.சா.ஆ.1,2 ஆவணத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அதேபோல்

கையெழுத்து நிபுணரிடம் இருந்து அறிக்கை பெறப்பட்டதா போன்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து நிபுணர் அறிக்கை நீதிமன்றத்திற்கு வந்துவிட்டது என்றாலும், அந்த அறிக்கை எங்களுக்கு விரோதமாக உள்ளது என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1990-1995 வரை உள்ள மடத்தின் கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் 30 வருடத்திற்கு மேலாக உள்ளதால் சரிபார்த்து தான் சொல்லவேண்டும். பி.வா.சா.ஆ.1,2,3 ஆனது 1989-1992 வரையிலான மடத்தின் கணக்குகள் என்றால் சரிதான். ஆகையால் 1992 முதலான மடத்தில் கணக்குகள் இருக்கும் என்றால் சரிபார்க்க வேண்டும். காசிவிஸ்வநாததேசிக சுவாமிகள் எழுதிய உயிலை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ராமதாஸ் ரெட்டியார் வா.சா.ஆ.1,2 ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளார் என்று கட்சி செய்வது தவறு என்றால் சரியல்ல. ராமதாஸ் ரெட்டியாருக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரயம் செய்து கொடுத்திருக்கவேண்டும் என்றாலும் அதனை தவிர்பதற்காகவே கட்சி செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Suganiya Sri,*
Additional District Munsif(FAC),
Chidambaram.